Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 277

புதன்கிழமை 30 ஓகஸ்ட் 2023

ஆவணி 13 ஆம் நாள் – வள்ளு



அஸ்வெசும நிதி வழங்கல்

# தகுதியற்றவரெனின் நிதி பறிக்கப்படும்!

## இராஜாங்க அமைச்சர் அதிரடி அறிவிப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**'அஸ்வெசும' பயனாளிகளுக்கு நிதி வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியற்றவர்கள் எவராவது நிதியைப் பெறுகின்றார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவ்வாறானவர்களுக்கு நிதி வழங்கப்படுவது நிறுத்தப்படுவதுடன் வழங்கப்பட்ட நிதி அவர்களிடமிருந்து முழுமையாகப் பறிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

>>08

பிறந்து நான்கு மாதமேயான

## குழந்தையின் கழுத்தில் கத்திவைத்துக் கொள்ளை

சண்டிலிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து நுழைந்த கொள்ளையர்கள், பிறந்து நான்கு மாதமேயான

>>08

கத்தியுடன் கைதுசெய்யப்பட்ட

## பல்கலை மாணவன் போதைக்கு அடிமை!

சிகிச்சைக்கு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மையின மாணவர் ஒருவர், கத்தியை வைத்து ஏனையவர்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர் போதைக்கு அடிமையானவர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

>>08

## ஊசிமூலம் ஹெரோயின் நுகர்ந்த இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 30

உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னை ஊசி மூலமாக நுகர்ந்த இளைஞர், கிருமித் தொற்றுக்கு இலக்காகி

>>08

## சந்நிதியானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

கடந்த 18ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமானது. நேற்று சப்பறத் திருவிழா இடம்

>>08

## அநுரவே வேட்பாளர் ஜே.வி.பி. அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 30

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமது வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. ஜே.வி.பி.யின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இதன்போதே இம்முடிவு எடுக்கப்பட்

>>08










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பூர்வீகக் கிராமங்களை விடுவிக்கும்வரை போராடுவோம்

## ரவிகரன் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, ஓக. 30**
**தமிழர்களின் பூர்வீகக் கிராமமான தண்ணி முறிப்பிலுள்ள காணிகளை முழுமையாக விடுவித்து அவர்கள் குடியமர்த்தப்படும் வரை தொடர்ந்து நாம் மக்களோடு துணைநின்று போராடுவோம் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புபகுதியில், தொல்லியல் மற்றும், வனவளத் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்கு அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், காணிகளுக்குரிய மக்கள் இணைந்து நேற்று முன்தினம்களப்பயணம்மேற்கொண்டனர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு, தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். தற்போதுவரை அவர்களை மீளக்குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

தமது காணிகளைத் தாமே துப்புரவு செய்து, விவசாய நடடிக்கைகளை மக்கள் மேற்கொண்டபோது, தொல்லியல் திணைக்களத்தாலும், வனவளத்திணைக்களத்தாலும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

அந்தவகையில் குறித்த காணிபிணக்குத் தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரிகள் மற்றும்உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள், காணிக்குரியமக்கள் குறித்தபகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுதீர்மானம் எடுக்க முடிவுசெய்யப்பட்டது. அதற்கமைய நேற்றுமுன்தினம் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமைகள் ஆராயப்பட்டன. அதன்போது தொல்லியல் திணைக்கள எல்லைக்கற்களுக்கு வெளியே விவசாய நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் எனவும் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மற்றும் உரிய அமைச்சுக்களுடனும், கலந்துரையாடிதீர்வு காணவும்முடிவுசெய்யப்பட்டது. எனினும், தமிழ்மக்களின் பூர்வீக காணிகளை, விவசாய நிலங்களை முழுமையாக விடுவிக்கும்வரை நாம் தொடர்ந்தும் மக்களோடு துணைநிற்போம். போராடுவோம் - என்றார். (ச-246)

# மீண்டும் ஜனாதிபதி; மைத்திரி விருப்பம்!

கொழும்பு, ஓக. 30



மீண்டும் ஜனாதிபதியாக செயற்படுவதில் எனக்கு எவ்வித சிரமமும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த அரசியல் கட்சியிலும் வெட்டினால் நீலம், வெட்டினால் பச்சை, வெட்டினால் சிவப்பு என்று சொல்பவர்கள் இல்லை. இன்று தொழிலதிபர்கள் மகிழ்ச்சியாக இல்லை, அரசு ஊழியர் மகிழ்ச்சியாக இல்லை, மீனவர்கள் மகிழ்ச்சியாக இல்லை, சாதாரண குடிமகன் மகிழ்ச்சியாக இல்லை. பாடசாலைகளில் போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

இவற்றைத் தடுப்பதற்கும் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மிகவும் பயனுள்ள நடவடிக்கைகள் தேவை என்பதை நாங்கள் காண்கிறோம். நாம் அதை செய்ய முடியும். கட்சி என்ற வகையில் அதற்கான தீர்வுகள் எங்களிடம் உள்ளன. ஜனாதிபதியாகப் பணியாற்றியவர் என்ற வகையில், அந்த அனுபவங்களுடன் மீண்டும் ஜனாதிபதியாக இருப்பதில் எனக்குச் சிரமம் இல்லை. சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குப் பிறகு, எனது நல்லாட்சியின் காலம் முழு உலகையும் நான் வென்ற காலம் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றேன் - என்றார். (ம)

# பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பயனின்றிப் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 30

விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். அநுராதபுரத்தைச் சேர்ந்த செனவிரட்ண (வயது -27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முறிகண்டிக்கும் இரணைமடுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த 25ஆம் திகதியன்று ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

வீதியைக் கடந்த மாட்டுக்கு இடம்விட்டுப் பயணிக்க முற்பட்டவேளை, பாரவூர்தியுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ம-26.27)

# அடைக்கலநாயகிக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 30

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி அன்னையின் வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

வழிபாடுகளைத் தொடர்ந்து எதிர்வரும் 7ஆம் திகதி நற்கருணைப் பெருவிழாவும், 8ஆம் திகதி திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். (ம)

# பாலியல் சீண்டலில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி மாற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 30

பெண் பொலிஸ் உத்தியோகத்தருடன் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட பலாலி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி இரவுவேளை கணினிப் பிரிவில் கடமையில் இருந்த பெண் பொலிஸ் அதிகாரியுடன், போதையில் இருந்த குறித்த பதில் பொறுப்பதிகாரி பாலியல் அங்க சேட்டையில் ஈடுபட்டார் என்று அந்தப் பெண் பொலிஸ் அதிகாரியால் முறைப்பாடு வழங்கப்பட்டது. இந்த நிலையிலேயே குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி இடமாற்றப்பட்டதுடன், ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-125)

# பௌத்தர்களே இல்லாத இடங்களில் விகாரை அமைப்பதே பயங்கரவாதம்!

## அருட்தந்தை மா.சக்திவேல் சுட்டிக்காட்டு

பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளைக் கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை, தூபிகளை, விகாரைகளை அமைப்பதுதான் பயங்கரவாதம் - என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மிக அண்மைக்காலமாக காவி உடைதரித்த ஒரு சிலரின் நடவடிக்கைகள் தனிமனித சுதந்திரத்துக்கும், நாட்டின் சட்டம் ஒழுங்குக்கும், நிர்வா கத்துக்கும் பயங்கர அச்சசுறுத்தலாக அமைந்துள்ளதை நாட்டின் சட்டம் அங்கீகரிக்கப் போகின்றதா? எனக் கேட்கவேண்டியிருக்கின்றது. கிழக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, காவி உடை உடுத்தவர்களின் பயங்கரவாதச் செயற்பாட்டினால் கூட்டம் தடைப்பட்டுள்ளமை மிக ஆபத்தான செய்திகளை வெளிப்படுத்துகின்றது.

இத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தல்களை அரசு தொடர்ந்து அனுமதிக்கக் கூடாது.

நாட்டின் ஒரு சாதாரண குடிமகன்அல்லது பொது அமைப்பினர் தமக்கான நீதி கிட்டவில்லை என்பதற்காக அரச திணைக்களங்களுக்குள் அல்லது அமைச்சர்கள் ஆளுநர்களின் தலைமையின் கீழ் நடக்கும் உத்தியோகபூர்வ கூட்டத்துக்குள் அத்துமீறி உள்நுழைய முடியுமா? அதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் இடமளிப்பார்களா? அவ்வாறு உள்நுழைந்தால் அவர்களின் நிலை என்னவாகும்?

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் சர்வமத தலைவர்கள் சிலரை காவி உடை அணிந்தோர் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக தடுத்து வைத்திருந்தனர். குருந்தூர்மலையில் நீதிமன்றத்தின் அனுமதியோடு நடைபெற்ற பொங்கலுக்குத் தடையாக இருந்தனர். 36ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட 13ஆம் திருத்தத்தை தீயிட்டுக் கொளுத்துகின்றனர். இதுவே பயங்கரவாதமாகும்.

நாட்டில் மீண்டும் இனவாத மதவாத வன்முறைகள் பலவந்தமாக தூண்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். குறிப்பாக நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பாவித்து வன்முறைக்கு தூபமிடுவோரின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும்- என்றுள்ளது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நே**ற்று டொக்டர் ஒராள் செய்த சமூக அக்கறையில்லாத வேலையைப் பட்சி சொன்ன தெல்லோ. ஆனால் எல்லா டொக்டர்மாரும் அப்பிடியில்லைத்தான். சமூக அக்கறையோட இயங்கிற ஒரு டொக்டரைப் பற்றி இண்டைக்குச் சொல்லியே ஆகோணும். அவர்தான், டொக்டர் சிவன்சுதன்.

கூடுதலா டொக்டர்மார் தங்கட வேலை, கிளினிக் எண்ட வட்டத்தைத் தாண்டி வாறதில்லை. ஆனால் டொக்டர் சிவன்சுதனோ தனக்கு நேரம் கிடைக்கேக்க கவிதை, பாட்டு, கட்டுரை எண்டு கலை, இலக்கிய 'கிறவுண்டில'இறங்கி சிக்ஸர் சிக்ஸரா வெளுப்பார். இப்ப அதின்ர இன்னொரு கட்டமா 'தூவானம்'எண்டொரு படம் எடுத்தார். ஈழத்தில ஒரு தமிழ்ப் படத்தை தயாரிக்கிறதெண்டதே பெரும்பாடு. அப்பிடி பாடுபட்டுத் தயாரிச்சாலும், பாக்கிறதுக்குச் சனம் வாறது அரிதிலும் அரிது. ஆக, இஞ்ச வந்த படங்களில 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' எண்ட படம் மட்டும்தான் நாலைஞ்சு நாள்'ஹவுஸ் புல்லா' ஓடி லாபத்தைக் குடுத்தது. மிச்சப்படமெல்லாம் சொந்தக் காசில சூனியம் வைச்ச கேஸ்தான்.

இப்பிடிப்பட்ட நிலையில துணிஞ்சு 'தூவானத்தை'தயாரிச்சவர் சிவன்சுதன். இப்ப என்னடாவெண்டால் உள்நாட்டிலையும், வெளிநாட்டிலையும் படம் தாறுமாறா ஓடி 100ஆவது 'சோவும்' கண்டிருக்கு. ஈழத்தில தயாரிச்ச ஒரு தமிழ்ப்படம் 100 'சோ' ஓடுறதெண்டதே ஒரு கின்னஸ் சாதனைதான். அதைச் சாதிச்ச வெற்றியைக் கொண்டாடத்தானே வேணும். அந்த வெற்றிவிழா கிட்டடியில கம்பஸில நடந்தது. வழக்கமா ஒரு சினிமாப்பட விழா எண்டால், ஒரு ஹொட்டலில விழாவை நடத்தி அதில நடிச்ச, தயாரிச்ச ஆக்கள் வந்து தங்களைத் தாங்களே புழுகித் தள்ளிப்போட்டு, குத்துப்பாட்டு போட்டு கூத்தாடிப்போட்டு, 'தண்ணிப்பார்ட்டியோட' முடிப்பினம். இத்தனைக்கும் அந்தப் படத்துக்கு போட்ட முதலே வந்திருக்காது. அதையும் நாலைஞ்சு பேர்தான் பாத்திருப்பினம்.

ஆனா, கம்பஸ் கைலாசபதி கலையரங்கில நடந்த தூவானம் நூறாவது காட்சி விழாவில, டொக்டர் சிவன்சுதன் தன்ர சமூக அக்கறையைக் காட்டத் தவறேலை. படத்தில நடிச்ச, பின்னணி வேலையள் செய்த எல்லாருக்கும் விருது குடுத்துப் போட்டு, எங்கட கலாசாரத்தைக் காட்டுற வில்லுப்பாட்டு மாதிரி கலை நிகழ்ச்சியளும், தூவானம்படத்தின்ர நூறாவது திரையிடலும் வெளிமேடையில தான் நடத்தினவை. ஆனால் அந்த வெளி மேடைக்குப் போனவைக்கு ஒரே ஆச்சரியம். மேடையைச் சுத்தி ஓலைக்கொட்டில்கள். ஒவ்வொரு கொட்டிலுக்கையும் ஒவ்வொரு சாப்பாடு. எல்லாமே எங்கட பாரம்பரியமான, உடம்புக்கு ஆரோக்கியமான சாப்பாடுகள். விலையும் சரியான மலிவு. சாப்பாடுகளின்ர ரேஸ்ட்டும் 'அந்தமாதிரி'. இப்பிடி எங்கட பழையகாலச் சாப்பாட்டை, 'பனையோலைப் பிளா'வுக்குள்ள போட்டு சுடச்சுடச் சாப்பிட்டபடி, வில்லுப்பாட்டையும், கலைநிகழ்ச்சியளையும், படத்தையும் பாத்து ரசிக்க குடுத்தெல்லோ வைச்சிருக்கவேணும். படத்தைப் போட்டு உள்ளத்துக்கு மட்டுமில்லாமல், இப்பிடி பாரம்பரிய உணவுத் திருவிழாவையும் சேர்த்து நடத்தி நாக்குக்கும் விருந்து வைச்சு, ஒரு நிகழ்வை எப்பிடி சமூக அக்கறையோடையும், அர்த்தமுள்ளதாவும் நடத்துறது எண்டு யாழ்ப்பாணத்தில உள்ளவைக்கு பாடம் நடத்தின டொக்டர் சிவன்சுதனை எப்பிடிப் பாராட்டினாலும் அது பத்தாது.



- பட்சி

padsi@uthayan.com

# பிரேரணை தோல்வியடையும் மொட்டுக் கட்சியினர் சூளுரை

கொழும்பு, ஓக.30

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்போம் என்று சூளுரைத்துள்ளார் ஆளுங்கூட்டணியின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்ச ஆட்சிகாலத்தில், போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டில் எல்லா இடங்களிலும் எரிவாயு அடுப்பு வெடிக்கின்றது என்ற செய்தி உருவாக்கப்பட்டது. ஊடகங்களிலும் அந்த செய்திகள் வெளியாகின. ஆனால், கோத்தாபய ராஜபக்சபதவி விலகிய பின்னர் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் இல்லாமற்போயின.

அதேபோல சுகாதாரத் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு கெஹலிய ரம்புக்வெல பொறுப்புக்கூறவேண்டும் என விஞ்ஞானபூர்வமாக எதுவும் நிரூபணமாக வில்லை. அன்றுபோல் இன்றும் சூழ்ச்சிகள் இடம் பெறக்கூடும். சுகாதார அமைச்சர் பக்கம் நாம் இருப்போம். அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் - என்றார். (எ-44)





திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

JAFFNA ELECTRICALS
DEALERS QUALITY ELECTRICAL & ELECTRONIC ITEMS
யாழ்ப்பாண மின்னகம்
தரமான மின் உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களின் முகவர்
இல. 94 (6), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2353 Fax : 021 222 4303






திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

வெஸ்ரன்
ஜுவல்லர்ஸ்



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6916





## நல்லூரான் சிறப்பம்சம்

### துயரம் தீர்க்க வாராயோ!

வீரவே லாயுதனே வெற்றிமயில் வாகனனே
சூரசங் கார சுவாமி குருநாதர்
கூருங் கருணைக் கடலே குணமலையே
பார்த் துயரம் பறிக்க விங்கு வாராயோ!
ஐயா வரசே யமுதே யருள் சுரக்கும்
கையா றிரண்டுடைய கற்பகமேயிக் கலியில்
மெய்யான தேவே செல்வேலா வுமை பாலா
செய்யா யிடும்பை கெடச் சீரருள் செய்யாயோ!

த.நாராயணன்




# வீசா நடைமுறைகளை இலகுபடுத்தத் திட்டம்

சமகாலத்தில் நிலவுகின்ற வீசா முறைகளை மிகவும் இலகுபடுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வு சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய எமது நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டவருக்கு குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வரும் வீசா, வதிவிட வீசா மற்றும் பயண வீசா என 3 வகையான வீசாக்கள் வழங்கப்படுகின்றன. வருகைதரும் வீசா மற்றும் வதிவிட வீசா ஆகிய 2 வகையான வீசா முறைமையின் கீழ் வழங்கப்படுகின்ற வீசா வகைகளில் காணப்படுகின்ற சிக்கலான தன்மையைக் கருத்திற்கொண்டு அதிகளவிலான வெளிநாட்டவர்களைக் கவர்ந்திழுக்கின்ற வீசா முறைகளைக் கருத்திலெடுத்து எமது நாட்டில் நடைமுறையிலுள்ள வீசா முறையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீண்டும் தயாரிப்பதற்கு ஆலோசனை

**கொழும்பு, ஓக.30**

**தற்போது வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள சட்டவரைவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களை உள்வாங்கிப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீண்டும் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.**

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக கடந்த 27 ஆம் திகதி மார்ச் மாதம் 2023 ஆண்டு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சட்டவரை வுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில பிரிவுகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற பல தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு சட்டவரைவுக்குத் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஐ.எம்.எப். கட்டுப்பாட்டில் திராணியின்றி இலங்கை!

## அநுரகுமார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 30

பிரிட்டனின் ஆட்சியின் கீழ் முன்பு இலங்கை இருந்ததைப் போன்று இனி சர்வதேச நாணய நிதிய ஆட்சியின் கீழ் செயற்படும் நிலைமை தற்போது நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது - இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை நாடாளுமன்றம் தனது நிதி சுய நிர்ணயத்தை சர்வதேச நாணய நிதியத்திடம் ஒப்படைத்துள்ளது. நாட்டில் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய விடயங்கள் யாவற்றையும் சர்வதேச நாணய நிதியமே தீர்மானிக்கின்றது. அதன்படியே அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுபட்டு செயற்படுகின்றது.

மத்திய வங்கி திருத்தச்சட்டம் பற்றி விவாதிப்பதற்கு இரண்டு நாள்கள் ஒதுக்குமாறு கோரிய போது அரசாங்கம் மறுத்துவிட்டது.

காரணம், இந்த விவாதத்துக்கான நேரத்தை சர்வதேச நாணய நிதியமே தீர்மானிக்கும்.

அரசு திராணியற்று மேற்கொள்ளும் இந்தச் செயன்முறை மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும் - என்றார். (ச-6)

# ஆளும், எதிர்க்கட்சிகள் இணைந்து அலி சப்ரி ரஹீம் மீது பிரேரணை!

கொழும்பு, ஓக.30

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் தங்கக் கடத்தல் விடயத்தில் நாடாளுமன்ற சிறப்புரிமைகள், ஒழுக்காற்றுக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றைக் கொண்டுவந்துள்ளார்.

எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல இந்தப் பிரேரணையை வழிமொழிந்துள்ளார். இந்தக் குழு 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு 2018ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 28ஆம் திகதி முதல் செயற்பட்டு வருகின்றது.

இந்தக் குழுவுக்கு சமல் ராஜபக்ச தலைமை தாங்குகிறார். நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவரை பொலிஸ் விசாரணைக்கோ, நீதிமன்ற விசாரணைக்கோ உட்படுத்துவதற்கு இந்தக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பந்தப்பட்ட உறுப்பினரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து குறிப்பிட்ட காலத்துக்கு இடைநிறுத்தவேண்டும் என்று சபைக்கு பரிந்துரை செய்யலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 3 கிலோ தங்கத்தைக் கடத்திக்கொண்டு வந்துள்ளார். அவர் கொண்டு வந்த தங்கத்தின் பெறுமதி 70 மில்லியன் ரூபா. ஆனால், அவருக்கு 7.5 மில்லியன் ரூபா தான் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அவர் மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற பெயரில் பிரதம நீதியரசர்களை விசாரணைக்கு அழைக்கிறீர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தங்கம் கடத்தியது தவறு என ஏன் அறிக்கை விடவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

1956ஆம் ஆண்டு நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழலில் ஈடுபட்டபோது அப்போதைய அரசாங்கம் தனது உறுப்பினர்களையே பதவி நீக்கம் செய்திருந்தது. அதே சட்டத்தை திரும்ப அரசமைப்பில் நிறைவேற்றி அலி சப்ரி ரஹீமின் பதவியைப் பறிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற குழுத்தலைவரிடம் கோரிக்கை விடுக்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

# சுவிஸ் நாடாளுமன்றத் தேர்தல் ஈழத்தமிழ் இளைஞன் களம்!



யாழ்ப்பாணம், ஓக. 30

சுவிற்ஸர்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் ஈழத்தமிழ் இளைஞரான அருளீஸ்வரன் ஜெகதீஸ்வரன் என்பவர் சுவிஸ் சமூக ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடவுள்ளார்.

தாயகத்தில் கட்டுவன் பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், புலம்பெயர்ந்து 30 வருடங்களாக சுவிஸில் வசித்துவருகிறார்.

யுனிசெப் நிறுவனத்தின் சுவிஸ் கிளையில் இணைந்து பல்வேறு சமூகநலச் செயற்பாடுகளை ஜெகதீஸ்வரன் முன்னெடுத்து வருகிறார். இந்த நிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள சுவிஸ் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் களமிறங்கவுள்ளார். (ச)



தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. (ய-27)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் உண்டாகும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினை ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை பாதிக்கும். அனுசரித்துச் செல்லவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** புதியமுயற்சிகளைத்தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மீண்டும் அதே பழைய யுக்தியா?

இலங்கையில் அண்மைக்காலமாக இனவாதம் மீண்டும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்திருக்கின்றது. உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் புகைந்துக் கொண்டிருந்த சிறுபான்மையினருக்கு எதிரான இனவாதம் இப்போது பகிரங்கமாக வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியின் காரணமாகத் தோன்றிய அரசியல் நெருக்கடியால் ராஜபக்ச குடும்பம் அதிகாரங்களைக் கைவிட வேண்டியதாயிற்று. அப்போது ஆபத்பாந்தவராக ஜனாதிபதிப் பதவியைக் கையிலேடுத்தார் ரணில் விக்கிரமசிங்க. சர்வதேசத்தின் கடன்களின் மூலம் இப்போது நாடு தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திக்கொண்டாலும், நாட்டின் பொருளாதாரம் இப்போதும் ஆபத்து நிலையிலேயே இருக்கின்றது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக எகிறியுள்ள வாழ்க்கைச்சுமையால் மக்கள் திணறிக் கொண்டே இருக்கின்றனர்.

நாடு இந்தநிலையில் இருக்க பொருளாதாரச் சுமைக்கு மேலாக சிறுபான்மையினரான தமிழ் மக்கள் அடக்குமுறைகளையும், அபகரிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாகியிருக்கின்றனர். சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் தெற்கில் மீண்டும் கொடிகட்ட ஆரம்பித்திருக்கின்றது. அரச இயந்திரத்தின் ஆதரவுடன் வடக்கு– கிழக்கில் முன்னெடுக்கப்படும் அபகரிப்புகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தமிழ் மக்கள் பிரிவினைவாதிகளாக தெற்கில் சித்திரிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக சிங்கள மக்களைக் கொம்புசீவிவிடும் கைங்கரியத்தை தெற்கு அரசியல்வாதிகளும், பௌத்த தேரர்களும் ஆரம்பித்திருக்கின்றனர்.

வடக்கு– கிழக்கு மாகாணங்கள் எங்கும் அரசதிணைக்களங்கள், பௌத்த தேரர்கள் அத்துமீறிய பௌத்தமயமாக்கலைத் துணிவுடன் முன்னெடுக்கின்றனர். நாட்டின் நீதித்துறையோ, சட்டமோ தங்களை எதுவும் செய்துவிடமுடியாது என்ற இறுமாப்புடன் நடந்துகொள்கின்றனர். அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் பகிரங்கமாக அச்சுறுத்தல்களை இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிராகத் திரளவேண்டும் என்று அறைகூவுகின்றனர். இரு இனங்களுக்கு இடையே பிளவுகளை அதிகரிக்கும் கைங்கரியங்களை முன்னெடுக்கின்றனர்.

நாட்டின் நல்லிணக்கம் தொடர்பாக தமிழ் மக்களுக்கு பாடம் எடுக்கும் நாட்டை மீட்டெடுக்கவே பதவிக்கு வந்தேன் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களுக்கு எதிரான தெற்கில் கட்டமைக்கப்படும் இனவாதப் போக்கை வேடிக்கை பார்க்கின்றார். தன்னைச் சந்திக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் ஜனாபதிபதி அவற்றை நிறைவேற்றுவதில் மந்தபோக்கையே கைக்கொள்கின்றார். பொருளாதார நெருக்கடியால் அரசாங்கத்துக்கு எதிராக உள்ள மக்களின் மனப்போக்கை மாற்ற அவர்களைத் திசை திருப்ப ஜனாதிபதியும் சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்படும் இனவாதத்தைக் கண்டும்காணாது விடுகின்றாரா என்ற சந்தேகத்தையும் தவிர்த்து விடமுடியாது.


ஏனெனில் நாட்டின் கடந்தகால வரலாறு அவ்வாறானது. தங்கள் பதவிக் கதிரைகளுக்கு ஆபத்து வரும்போது சிங்களத் தலைவர்கள் கைக்கொள்ளும் யுக்தி, சிறுபான்மையினருக்கு எதிராக இனவாதத்தைக் கிளப்பி பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதுதான். 2019ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த ராஜபக்ச குடும்பமும் ஈஸ்டர் தாக்குலைப் பயன்படுத்திக் கொண்டதை இங்கு முன்னிறுத்தலாம். சுயநல அரசியலுக்காக முன்னெடுக்கும் இவ்வாறான கீழ்த்தர அரசியலுக்கு மக்களும் எடுபட்டுவிடுகின்றனர். நாட்டில் தற்போதைய அரசியல் நெருக்கடி மிகுந்த நிலைமையில், நாட்டின் வங்குரோத்துக்கு அரசியல்வாதிகளே காரணம் என்ற கோபம் மக்களின் மனங்களில் கனன்றுகொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக தெற்கில் முன்னெடுக்கப்படும் இனவாதப் பரப்புரைகளும் இந்த நோக்கிலேயே முன்னெடுக்கப்படலாம்.

இனவாதத்தை முன்னிறுத்தி நாடு நகர்ந்தமையாலேயே கொடும் உள்நாட்டுப்போரைச் சந்திக்க நேரிட்டது. அனைத்து வளங்களையும் கொண்ட 'இந்து சமுத்திரத்தின் முத்து' பிற நாடுகளிடம் கையேந்தும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது. அவற்றில் இருந்து நாட்டு மக்கள் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதிகார சுகத்துக்காக மீண்டும் தூண்டப்படும் இனவாதத்தின் பக்கம் எடுபடாது, அவற்றின் நோக்கங்களை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். நாட்டு மக்கள் முக்கியமாகப் பெரும்பான்மையின மக்கள் இளம்தலைமுறையினர் இனவாதப் பரப்புரைகளுக்கு எடுபட்டு விடக்கூடாது.

## நாளொரு நல்வார்த்தை

நாம் சரியான விடயங்களை விதைக்கவில்லை என்றால், தவறான விடயங்களை அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.

- மாயா ஆஞ்ஜெலோ



# பொலிஸ் அதிகாரத்தால் தெற்குக்கே மிக ஆபத்து



## காணியதிகாரத்தைப் பகிர உடன்பாடு ஜே.வி.பி. நிலைப்பாடு இது

**கொழும்பு, ஓக. 30**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக பொலிஸ் அதிகாரத்தை மயப்படுத்தினால் வடக்கில் அல்ல தெற்கில் பெரும் பிரச்சினை வெளிக்கிளம்பும். ஏனெனில் இலங்கையில் பொலிஸ் என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.**

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தற்போது வடக்கிலுள்ள கட்சியோ அல்லது தெற்கிலுள்ள கட்சியோ விவாதத்தை ஆரம்பிக்கவில்லை. மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் ஆரம்பித்துள்ளார். வடக்கின் வாக்குகளை இலக்கு வைத்தே '13' குறித்த விவாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தந்திரோபாய அரசியல் நகர்வே இதுவாகும். '13' தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் ஜனாதிபதி அறிவிக்கவேண்டும். நாட்டில் பொலிஸ் துறை முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. '13' ஊடாக பொலிஸ் அதிகாரம் வழங்கின் அது வடக்கில் அல்ல தெற்குக்கே பெரும் பிரச்சினையாக அமையும். காணி அதிகாரம் பகிரப்படின் அதற்கு நாம் இணக்கம். தொல்லியல் இடங்கள் மத்திய அரசின்கீழான மகாவலி, வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குரிய காணி, அதேபோல வடக்கில் படையினர் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் - என்றார். (ச-44)

# தேசிய நல்லிணக்க அலுவலக சட்டவரைவு அமைச்சரவைக்கு

கொழும்பு, ஓக.30

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

அதில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டு அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:-

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டவரைவைத் தயாரிப்பதற்காக கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்தச் சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது- என்றார். (எ-44)

## நாளை

31.08.2023
வியாழக்கிழமை
ஆவணி 14

சுபநேரம் : 07.35 - 09.05
ராகுகாலம் : 01.35 - 03.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நெருக்கடி இலங்கையில் தீவிரம்

## எரான் எம்.பி. எச்சரிக்கை



**கொழும்பு, ஓக.30**
**நோய்களால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையிலேயே சுகாதாரத்துறை இயங்கவேண்டும். சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக உயிரிழப்புகள் ஏற்படக்கூடாது. பொருளாதார நெருக்கடி தற்போது சுகாதார நெருக்கடியாக மாற்றமடைந்து இலங்கையில் தீவிரமான தாக்கங்களை உண்டாக்கி வருகின்றது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது நாட்டைச்சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்கள். தற்போது சுகாதாரத்துறையில் அவதானிக்கப்படும் நிலைவரம் பாரதூரமானது.

இந்தியாவின் கடனுதவியில் 114 மில்லியன் டொலர் நிதி தேசிய மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது. அந்தநிதியில் இதுவரை 68.5 மில்லியன் டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது. அந்தநிதி அத்தியாவசிய மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று அண்மையில் இலங்கை மருத்துவ அமைப்பு குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

இந்த விடயத்தில் தீர்மானங்களை மேற்கொண்டது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேபோன்று இந்தியக் கடன் பதிலுதவி மூலம் கொண்டுவரப்பட்ட மருந்துப்பொருள்களில் 80 சதவீதமானவை அனுமதி அளிக்கப்படாத மருந்துகள் என்று மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம கூறியிருப்பது பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

பொதுமக்களுக்குச் சொந்தமான பெருமளவு சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டதன் விளைவாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. இந்தியா விண்வெளிக்கு ரொக்கெட் அனுப்புவதற்கு நினைத்துக்கூடப் பார்த்திராத காலத்தில், ரொக்கெட் அனுப்பிய குடும்பமொன்று இலங்கையில் இருந்தது.

இப்போதும் சிலர் வெட்கமின்றி வாக்கு சேகரிக்கும் பரப்புரைகளுக்காக நாடு முழுவதும் செல்கின்றார்கள். பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் அன்றாடம் உண்பதற்கு உணவின்றித் தவிக்கும் சூழ்நிலையில், இத்தகைய நபர்களால் கூறப்படும் பொய்யான கதைகளை நம்பி ஏமாறவேண்டாம் என்று நாட்டுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (எ-இ)



## அதிகரிக்கும் ஏற்றுமதி வருமானம்

கொழும்பு, ஓக.30

கடந்த மாதம் நாட்டின் ஏற்றுமதி வருமானம் ஆயிரத்து 272 மில்லியன் அமெரிக்க டொலர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதத்தை விடவும், ஜூலை மாதத்தில் 2.18 வீத அதிகரிப்பை ஏற்றுமதி வருமானம் காட்டியுள்ளது. ஆயினும் கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 11.79 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ஆடை, துணி மற்றும் இறப்பர் உள்ளிட்ட தயாரிப்புகள் மற்றும் தெங்கு, தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருள்களுக்கான கேள்வி குறைந்தமை என்பவற்றால் கடந்த ஆண்டைவிடவும் இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## மருத்துவ நெருக்கடிகள் ஐ.நா.விடம் முறைப்பாடு

கொழும்பு, ஓக.30

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு இயற்கையாகத் தோன்றிய பிரச்சினை அல்ல. பொருத்தமற்ற நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் காரணமாக ஏற்பட்ட பிரச்சினை. இதுதொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்படும் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அந்தச் சங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டுக்குத் தரமற்ற மருந்துகள் கொண்டுவரப்பட்டபோதே எச்சரிக்கை விடுத்திருந்தோம். அதையும் மீறி மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் காரணமாகப் பல இறப்புகள் ஏற்பட்டுள்ளன. இதுதொடர்பாக நாம் சுகாதார அமைச்சுக்குப் பலமுறை அறிவித்திருந்தபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மந்தபோஷணையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் அங்கவீனர்கள் தொடர்பான முறையான எந்தவிதத் தகவல்களும் சுகாதார அமைச்சிடம் இல்லை. பொய்யான தரவுகளைப் பயன்படுத்தி உண்மையான தரவுகளை மறைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். அவசர மருந்து கொள்வனவு எனும் போர்வையில் பல கோடிக்கணக்கில் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது - என்றுள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துக் கொள்வனவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றைச் சமர்ப்பித்துள்ளோம். நாம் அடுத்த வாரம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளோம். அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் நாம் இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளோம் என்று சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார். (எ-இ)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை கத்தோலிக்க திருச்சபைக்கு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையைக் கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு கத்தோலிக்கச் திருச்சபையாலும் ஒத்துழைப்பு வழங்கமுடியும் -இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின்போது, அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதைத் தடுத்துள்ளதுடன், கடந்த காலங்களில் நடைமுறைப் படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரிச் சேவைகள் பலவற்றை தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக அரச சார்பற்ற நிறுவனங்களைப் பற்றி அதிகம் பேசப்படுகிறது.

நாட்டில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவு செய்யப்படாத அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்படமுடியாது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய அனுமதிக்கப் போவதில்லை -என்றார். (எ-இ)

## பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கு தே.அ.அட்டை

கொழும்பு, ஓக.30

பிறப்புச் சான்றிதழ் இல்லாததால் தேசிய அடையாள அட்டைகளைப் பெறமுடியாதுள்ளவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

40 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கான இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது என்று ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி தெரிவித்தார்.

கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன் வாக்காளர் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகள் விண்ணப்பிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்திய பாதுகாப்புக் கல்லூரிக் குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஓக.30

இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் 72 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைப் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவைச் சந்தித்துள்ளது.

இந்தச் சந்திப்பு ஜெயவர்த்தனபுரவிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. தமது கல்விச் சுற்றுலாவின் ஓர் அங்கமாக அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்திப்பின்போது நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.



அதேவேளை சீனக் கடற்படையின் ஆய்வுக்கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வருகை தரவுள்ள நிலையில் இந்தியக் கடற்படை அதிகாரிகளின் பயணம் இடம்பெற்றுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரியான முடிவு எடுக்காவிட்டால் புத்தசாசனம் அழிந்துவிடுமாம்!

## சிங்கள மக்களைத் தூண்டும் குணவங்ச தேரர்

கொழும்பு, ஓக.30

அரசியல்வாதிகள் ஓரிரு மாதங்களே தேசியம், புத்தசாசனம் என்று அக்கறையுடன் பேசுவார்கள். பெரும்பான்மையின மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் 2 ஆயிரத்து 500 ஆண்டுகால புத்தசாசனம் இல்லாது[illegible]க்கப்படும் - இவ்வாறு தேசிய வளங்களை ப[illegible]காக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல்வாதிகளே நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள். ஆனால், பொருளாதார பாதிப்பின் சுமை ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாட்டை மீட்கின்றோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. கடன் பெறுவதையும் மிகுதியாக உள்ள தேசிய வளங்களை ஏலத்தில் விடுவதையும் தவிர இந்த அரசாங்கத்திடம் பொருளாதார மீட்சித் திட்டங்களும் கிடையாது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசமைப்பின் 13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறு 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்பதை நாங்களும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அரசாங்கம் செயற்படும்போது நாங்களும் அதற்கு ஏற்றவாறு செயற்படுவோம் - என்றார். (எ-இ)

# சீனக் கப்பல் விவகாரத்தில் இலங்கை திரிசங்குநிலை!

## இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக.30

**சீனக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ள திகதியில் மாற்றம் செய்யவேண்டும் என்று இலங்கை சீனாவை கேட்டுக்கொண்டுள்ளது. இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் பின்னரே கப்பலுக்கான அனுமதி தொடர்பாகத் தீர்மானிக்கப்படலாம் என்று இந்திய ஊடகமான 'இந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.**

அதில் உள்ளதாவது:-

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலான ஷியான்-6 கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இலங்கையில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் குழப்பநிலை காணப்படுகின்றது. இந்தக் கப்பலின் வருகை தொடர்பாக இந்தியா கரிசனைகளை வெளியிட்டதை அடுத்து இந்த நிலைமை காணப்படுகின்றது.

சீனக் கப்பல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் நாரா நிறுவனத்துடன் இணைந்து 17 நாள்கள் ஆராய்ச்சியில் ஈடுபடவுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் கப்பல் கொழும்பு - அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தங்கியிருக்கும். இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கியுள்ளது என இலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளபோதும், சீனத் தூதரகத்தின் வேண்டுகோள் பரிசீலனையில் உள்ளது என்றும் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்கள், ஏவுகணை கண்காணிப்புக் கப்பல்கள் போன்றவற்றைச் சுதந்திரமாக இலங்கைத் துறைமுகங்களுக்குள் அனுமதிப்பது தொடர்பாக இந்தியா கரிசனை வெளியிட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது, இந்தியாவின் மூலோபாயப் பாதுகாப்பு கரிசனைகளை இலங்கை கருத்திற்கொள்ளவேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனால் சீன தலைநகரில் இடம்பெறும் புதிய பட்டுப்பாதை திட்டம் குறித்த உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட பின்னரே இலங்கை ஜனாதிபதி சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாகத் தீர்மானிப்பார் என்று தெரியவருகின்றது. இலங்கை சீனாவின் கடனில் சிக்குண்டுள்ள நிலையில் சீன ஜனாதிபதிக்கு அதிருப்தியை ஏற்படுத்தும் நிலையில் இலங்கை இல்லை என்பது வெளிப்படை. நீர்மூழ்கி செயற்பாடுகளுக்காகவும் தென்னிந்தியா ஊடாக ஆபிரிக்க சமுத்திரத்துக்காகப் புதிய பாதையை கண்டுபிடிப்பதற்காகவும் இந்து சமுத்திர கடற்படுக்கையை சீனா ஆராய்ந்து வருவது தொடர்பான தனது கரிசனையை இந்தியா வெளியிட்டுவருகின்ற அதேவேளை சீனக் கப்பலின் வருகையை எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குப் பிற்போடவேண்டும் என இலங்கை கேட்டுள்ளது. (எ-இ)

# ரணிலின் 'கப்சா' 13

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.30

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்கமாட்டார் என்றே நம்புகின்றேன் இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாட்டை அனுப்பவேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் கோரியிருந்தார், அதற்கு நாம் பதில் கடிதம் அனுப்பினோம். முதலில் இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட வேண்டும். அப்போது அதில் திருத்த வேண்டிய விடயங்கள், உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கட்சியின் கருத்தை தெரிவிக்கமுடியும் என சுட்டிக்காட்டியிருந்தோம். 13 இலுள்ள சில அதிகாரங்களை பகிர்வதில் பிரச்சினை இல்லை. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. நீங்கள் (ஊடகவியலாளர்) கூறியதுபோல 7 ஜனாதிபதிகள் தலையிடாத விடயத்தை இந்த ஜனாதிபதியும் செய்யமாட்டார் (13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தல்) என்றே நான் நம்புகின்றேன் - என்றார். (எ-44)

# அஸ்வெசும கொடுப்பனவுக்காக திறக்கப்படும் வங்கிகள்

கொழும்பு, ஓக.30

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக இன்று அரச வங்கிகள் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில், நலன்புரிக் கொடுப்பனவுக்காக மட்டும் வங்கிகள் இன்று திறக்கப்படவுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார். (எ-இ)

# வெப்பம்கூடிய காலத்தில் சிறுவர்களுக்கு திரவ உணவு!

## மருத்துவ நிபுணர் தீபல் பெரேரோ ஆலோசனை



தற்போது நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலையைக் கருத்திற்கொண்டு குழந்தைகளுக்கு இயற்கையான திரவ உணவுகளையும், அதிகளவில் நீரையும் வழங்க வேண்டும் என்று பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபல் பெரேரா தெரிவித்துள்ளார்.

வெப்பமான காலநிலையின்போது சிறுவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த காலகட்டங்களில் சில குழந்தைகளுக்கு தலைவலி, வாந்தி, தூக்கமின்மை, பசியின்மை போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

அதிக வெப்பத்தால் தோல் நோய் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதால், அதைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு குழந்தையையும் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் நீராடச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவுவதால் அந்தப் பிரதேசங்களிலுள்ள குழந்தைகளுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அசுத்தமான தண்ணீரைப் பருகுவதால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுகின்றது - என்றார். (எ-இ)

# மோல்டாவில் முதலீடு; அப்பட்டமான பொய்!

## ஜே.வி.பி. தலைவர் தெரிவிப்பு

மோல்டா தீவில் பணம் முதலீடு செய்திருந்தமை மற்றும் அயர்லாந்தில் வீடு எனக்கு எண்டு என்று முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் போலியானவை. எமது கட்சியிடம் கறுப்புப் பணம் இல்லை. போலித் தகவல்களைப் பகிர்ந்து அரசியல் செய்யாதீர்கள் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எங்கள் கட்சியினர் யாரும் பொதுமக்களின் பணத்தை திருடவில்லை. ஊழல்வாதிகளைத் தண்டிக்க எனக்கு அதிகாரமிருப்பின் முன்வரிசையில் பலர் தண்டிக்கப்படுவர். மக்கள் பணத்தைச் சுருட்டி மோல்டாவில் நிதி முதலீடு செய்துள்ளதாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அப்பட்டமானவை. அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்தவர்களே இப்படியான போலியான தகவல்களை வெளிப்படுத்திவருகின்றனர். ஒருவரையொருவர் நசுக்கி அரசியல் செய்யாதீர்கள். மக்களின் ஒரு சதத்தைக் கூட சொந்த செலவுகளுக்கு எமது கட்சி செலவளித்தது கிடையாது- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு செல்வச் சந்நிதியானின் சப்பறத் திருவிழா நேற்று இரவு பல நூறு பத்தர்கள் புடைசூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ம-26)

## கொடியேற்றம்

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுகொடியேற்றத்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.15க்கு ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாள்கள் மஹோற்சவம் இடம்பெறும். செப்ரெம்பர் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாம்பழ உற்சவமும், 6ஆம் திகதி புதன்கிழமை தெற்ப உற்சவமும், 7ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்ச உற்சவமும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவமும், 9 ஆம் திகதி சனிக்கிழமை வசந்தோற்சவமும், 10ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை திருமண உற்சவமும் இடம்பெற உள்ளன. (ம-100)



கிளிநொச்சி - தர்மபுரம் முத்து விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-113)

### தகுதியற்றவரெனின்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அஸ்வெசும' பயனாளிகளில் முதல் குழுவினருக்கு அரசாங்கம் என்ற வகையில், கொடுப்பனவுகளை வழங்க முடிந்துள்ளது. இதுவரை 6 இலட்சத்து 89 ஆயிரத்து 803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் சுமார் 4.395 பில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. ஓகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் ஒவ்வொரு மாதத்துக்கும் உரிய கொடுப்பனவை அந்தந்த மாதங்களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு தொடர்பில் மக்கள் விபரங்களை அறிய வேண்டுமெனில், 1924 என்ற துரித தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன், எவராவது முறைகேடாகவோ அல்லது தகுதியற்றவர்களாகவோ இருந்து இந்த நிதியைப் பெறுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டால், அவ்வாறானவர்களுக்கு உடனடியாகக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதுடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியைத் திரும்பப் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-26)

### அநுரவே...

டுள்ளது. 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போதும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுர குமார திஸாநாயக்க களமிறங்கினார். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ளார். எனினும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பெரமுனவுக்குள் இன்னமும் ஒருமித்த நிலைப்பாடு ஏற்படவில்லை. (அ-ம-44)

### குழந்தையின்...

குழந்தையின் கழுத்தில் கத்திவைத்து வீட்டில் இருந்தோரை மிரட்டி கொள்ளையிட்டுள்ளனர். வலி. தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகமூடியை அணிந்துவந்த நான்கு கொள்ளையர்களே இந்த இழிசெயலில் ஈடுபட்டுள்ளனர். 11 பவுண் நகைகள், 3 தொலைபேசிகள், 2 இலட்சம் ரூபா பணம், வங்கிப் புத்தகம் என்பவை அவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன. கொள்ளையிட்ட பின்னர் 'பொலிஸாருக்கு அறிவித்தால் பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும்' என்று தெரிவித்துவிட்டு, வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வீட்டு உரிமையாளரின் 'ஏச்.யு.8400' இலக்க மோட்டார்சைக்கிளில் அவர்கள் தப்பிச்சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125,26)

### பல்கலை...

கைதுசெய்யப்பட்ட மாணவர் சட்டமருத்துவ அதிகாரியிடம் நேற்று முற்படுத்தி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே, அந்த மாணவர் போதைக்கு அடிமையானவர் என்று தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது மாணவரை பிணையில் விடுவித்தநீதிமன்றம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெறுமாறும் அவருக்கு உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26,125)

### ஊசிமூலம்...

உயிரிழந்தார். ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அண்மையில் திடீர் சுகவீனமுற்ற இளைஞனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தபோது, அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே இளைஞன் கிருமித்தொற்றுக்கு உள்ளானமையும் போதைக்கு அடிமையானவர் என்பதும் கண்டறியப்பட்டது. இந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (அ-ம-100)

### சந்நிதியானுக்கு...

பெற்றதைத் தொடர்ந்து, இன்று காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (அ-ம-26)


## உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

**உதயன் ஊடகப் பயிற்சி - 2023**

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





"ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து." - வள்ளுவர்



உலக தெங்குதினம் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# தெங்குச்செய்கை பொருளாதார முன்னேற்றத்துக்கான திறவுகோல்



லக்ஷிகா

**உலகின் மிகப்பெரிய தேங்காய் உற்பத்தி நாடுகளில் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், இந்தியா, பிரேஸிலுடன் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையின் பசுமையான தோப்புகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தேங்காய் சுவையானதும் புத்துணர்ச்சியூட்டுவதுமான பானங்கள், உணவுப்பொருள்கள், கலைப்பொருள்கள், தொழிற்றுறை மூலப்பொருள்கள் ஆகியவைக்கு மிகவும் பிரபலமானது. ஆரோக்கியமானதும் இயற்கையானதுமான உணவுகளுக்கும் பானங்களுக்குமான தேவை, தேங்காய்க்கான கேள்வியை தற்காலத்தில் அதிகரித்துள்ளது.**

கடந்த தசாப்தத்தில், 2020 - 2021க்கு இடையில் ஏற்றுமதிப் பெறுமதியில் கணிசமான அதிகரிப்புடன், இலங்கையில் தேங்காய் தொழிற்றுறையின் ஏற்றுமதி செயற்றிறனில் நிலையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் 836.1 மில்லியன் டொலர் ஆகும்.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 25.80 வீதமான வளர்ச்சியாகும். இலங்கையின் மொத்த வர்த்தகப் பொருள்கள் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட ஒரு சதவீதம் அளவுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் தேங்காய், ஏற்றுமதியில் பங்களிப்புச் செய்துள்ளதோடு, 2019 முதல் 2020 வரையான காலப்பகுதியில் கொவிட் தொற்று நோயின் தாக்கம் இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

2021ஆம் ஆண்டில், இலங்கை ரூபாவின் மதிப்பு 10 வீதத்தால் வீழ்ச்சியடைந்ததும் உள்ளூர் தயாரிப்புகள் சர்வதேச சந்தையில் கணிசமான அளவு போட்டித்தன்மையடைய வழிவகுத்தது. சந்தை ஆராய்ச்சி ஒன்றின் சமீபத்திய ஆய்வுகளின் அடிப்படையில் 2021 முதல் 2031 வரை தேங்காய்த் தொழிலில் விரைவான வளர்ச்சி கணிக்கப்பட்டுள்ளது. தேங்காயும், தேங்காய் சார் பொருள்களின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் இருந்து வரும் அதிகரித்த கேள்வியும் தேங்காய் உற்பத்தியைத் தூண்டுகிறது.

தேங்காய் எண்ணெயின் நன்மைகள் பற்றி உலகளாவிய விழிப்புணர்வு தேங்காய் நுகர்வை அதிகரிக்கிறது. வெளிநாடுகளில் தேங்காய் எண்ணெய் உணவுப் பொருளாக மட்டுமன்றி அழகை மெருகூட்டவும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், சர்வதேச நிறுவனங்களின் தயாரிப்புக்களிலும் தேங்காய் எண்ணெய் கேசத்துக்கான எண்ணெய், சம்போ, சவர்க்காரம், கிறீம்களில் உள்ளீடாகவும் மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இயற்கையான சத்துக்கள் மற்றும் எலக்ட்ரோலைட்டுகள் அதிகம் உள்ள தேங்காய் நீர், இயற்கையான ஆற்றல் பானமாக ஆரோக்கியம் சார்ந்த நுகர்வோர் மத்தியில் பிரபலமடைந்து வருகிறது. குறிப்பாக வெளிநாட்டில் 'வீகன்' எனப்படும் சைவ உணவு மட்டுமே உட்கொள்ளும் ஒருவகை நுகர்வோர் பிரிவில் பெரும் புகழ் பெறுகிறது. தேங்காயில் இருந்து செய்யப்படும் இனிப்பு வகைகள் பிஸ்கட்டு வகைகள் மீது மக்கள் ஆர்வம் திரும்பி உள்ளது. குறைந்த விலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக கருதப்படுவதால், தேங்காய் ஓட்டின் கேள்வியும் பரவலாக அதிகரித்துள்ளது. உலகளாவிய ரீதியில் தேங்காய்க்கான கேள்வி இருந்தாலும் இலங்கையில் தேங்காய் செய்கையில் பெரும் சிக்கல்களை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கரிம உரக் கொள்கையால் தேங்காய் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களின் எரிபொருள் பற்றாக்குறையும் மின்வெட்டும் உற்பத்தியாளர்கள் நிலங்களை விற்பனை செய்யும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. ரஷ்யா - உக்ரைன் போரின் விளைவாக அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எரிசக்தி மற்றும் உரம் போன்ற பொருள்களின் உற்பத்தி மற்றும் வர்த்தகம் கடுமையாக சீர்குலைந்துள்ளதும் இலங்கையின் தென்னைப் பயிர் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதற்காக உற்பத்தியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தொழிற்றுறையின் முக்கியமான தேவைகளான பொருளாதார ஸ்திரத்தன்மை, உற்பத்திக்கான எரிபொருள், விவசாயத்துக்கான உரம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும். தொழிற்றுறையை நிலைநிறுத்தி, மேலும் சீராகச் செயற்பட முடிந்தவுடன், பின்வரும் பகுதிகள் நடுத்தர மற்றும் நீண்டகால அளவில் கவனிக்கப்பட வேண்டும். அறுவடை அதிகரிக்க, ஒவ்வொரு ஆண்டும் அதிக நாற்றுகளை நடவேண்டும். இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின்படி, 2021ஆம் ஆண்டில் மிகவும் பயனுள்ள இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு சிறந்த இனங்கள், பூச்சிக் கட்டுப்பாடு மேலாண்மை, மிகவும் பயனுள்ள உரங்களின் பயன்பாடு, சிறந்த ஊடுபயிர் உத்திகள், மிகவும் பயனுள்ள மண் மேம்பாட்டு நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

தற்போது உலகெங்கிலும் உள்ள நுகர்வோர் தாங்கள் உண்ணும் உணவின் தரம் குறித்து அதிக விழிப்புணர்வுடன் உள்ளனர். இறைச்சி, பாற்பொருள்களில் இருந்து தாவர மாற்றுகளை நோக்கித் திரும்புகின்றனர். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் தொழிலாளர் வருமான அதிகரிப்புக்கும் ஏற்றுமதித் தொழிலைக் கட்டியெழுப்புவது முக்கியமானதாகும்.

கணிசமான சவால்கள் இருப்பினும், மிக விரைவில் தென்னைப் பயிர்ச்செய்கை மூலமாக இலங்கை உலகளாவிய ரீதியில் தனித்துவ அடையாளத்தை அடைவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவுள்ளன.

இதனால் தேங்காய் தயாரிப்பு உற்பத்தியாளர்களுக்குத் தயாரிப்பு மேம்பாட்டில் புதுமைகளை புகுத்துவதன் மூலம் உலகளாவிய தேவையை பூர்த்தி செய்ய ஒரு அற்புதமான வாய்ப்பு உள்ளது. உதாரணமாக:- உள்ளூர் உற்பத்தியாளர்கள் தேங்காய் பாலைப் பயன்படுத்தி பால் இல்லாத சீஸ் போன்ற உயர் மதிப்புள்ள தேங்காய் பொருள்கள் மூலமாக தங்கள் வர்த்தக நாமங்களை விரிவுபடுத்தலாம்.

இலங்கையின் தேங்காய் விநியோகச் சங்கிலியின் முறையான வர்த்தகம் மூலமாகவும் உலகளாவிய ரீதியில் வர்த்தக நாமங்களை உருவாக்குவதன் மூலமாகவும் நிலையான நெறிமுறை உணவுப் பொருள்களுக்கான உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்ய இந்தக் காலங்கள் அதற்குச் சிறந்த வாய்ப்பாகும். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வை கலைகளுக்காக அர்ப்பணித்தவரே நாகப்பு

## கலைஞர் நாகப்பு அரங்கத் திறப்புரையில் பண்டிதர் கடம்பேசுவரன் புகழாரம்

கலைஞர் நாகப்பு, தன் வாழ்நாளைக் கலைக்காகவும் சமூக முன்னேற்றத்துக்காகவும் அர்ப்பணித்தவர். கூத்துக் கலையுடனான அவருடைய பிணைப்பு தன்னிகரற்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்.

கலைஞர் நாகப்பு அரங்கத் திறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பண்டிதர் கடம்பேசுவரனின் உரையின் சாராம்சம் வருமாறு:-

கலைஞர் கந்தையா நாகப்பு அரங்கின் திறப்புரையை பிரதேச பண்பாட்டு விழாவில் நிகழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி. இவ்வரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெறுவது பேருவகை தருவதாக உள்ளது.

இந்த மண்டபத்துள் வருகைதரும்போது என்னுணர்வு இளமைக் காலத்தை மீட்டு மகிழ்கின்றது.

இவ்வூர் கலைஞர்கள் பலரும் வாழ்ந்தவூர் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று ஊர்கள் திசைகளால் அழைக்கப்பட்ட காலம் அது. சிற்றூர்கள் வளர்ச்சி பெறாது இருந்தமையால் சிரமதானங்களின் மூலம் கூடி ஒருவருக்கொருவர் உதவிய காலம் அது. கைமாறு கருதாத உள்ளங்கள் இணைந்து ஒருவருக்கொருவர் உதவினர். கலைகளும் அவ்வாறே கூட்டுமுயற்சியால் உயர்ந்து விளங்கின.

**"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழிவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது தன்னே ரிலாத தமிழ்"**

தமிழ்க் கலைகளின் பேரால், தமிழின் பேரால் நாமெல்லாம் இங்கு கூடியுள்ளோம். தன்நேரில்லாத தமிழ். அதுவொரு செம்மொழி. தனித்தியங்கும் ஆற்றல் அதற்கு உண்டு. நாமெல்லாம் தனித்தமிழுக்கு முன்னுரிமை தரவேண்டும்.

### படித்துப் பெற்றுக்கொண்ட பட்டங்களுக்கே முன்னுரிமை

ஆரிய மொழியாம் சமஸ்கிருத மொழியால் ஆன சொற்களையும் பிறமொழி சொற்களையும் இயன்றவரை தவிர்க்கவேண்டும். அவ்வாறு தவிர்ப்பதற்கு பிறமொழி அறிவும் தேவை. சிங்களமொழி, ஆரிய மொழியாம் சமஸ்கிருதத்துக்கு முன்னுரிமை தருவது. அதனாலேயே அரச விருதுகள் சமஸ்கிருதத்தைத் தழுவி கலாபூஷணம் போன்ற விருதுகளைத் தருகின்றன. படித்துப் பெற்ற பட்டங்களே சிறப்பானவை. அவற்றுக்கே முன்னுரிமையை வழங்கவேண்டும். இதுவே என் விருப்பம். இதுவே அறிவுடைமை.

கலைஞர் நாகப்பு தம் வாழ்நாளைக் கலைக்காகவும் சமூக முன்னேற்றத்துக்காகவும் வாழ்ந்து காட்டியவர். இளமைக் காலத்திலிருந்தே தன் கலையுணர்வை வெளிப்படுத்தியவர். இளமைக்காலத்தில், மருத்துவர் கனகராசா எழுதிய நாடகத்தில் நடித்தவர். அவர் மடியில் குழந்தை வேடத்தில் அவர் நடித்த நாடகத்தில் யானும் தோன்றியவன்.

**"இல்லை ஒரு பிள்ளையென்று ஏங்குவோர் பலரிருக்க இங்கு வந்தேன் பிறந்தாய் என் செல்வ மகனே"** என்ற சினிமாப் பாட்டைப் பாடியே அவர் நடித்தார். நாடகங்களில் மட்டுமல்லாமல் கூத்துக் கலைக்கே தன்னைத் தந்தவர் நாகப்பு.

ஆடை பாதி, ஆள்பாதி, அரங்குபாதி, ஆடல் பாதி என்பதாக நாகப்பு அரங்குதரும் காட்சி யாவும் இவ்வரங்கில் சிறக்கும். சிறந்த அரங்குகள் பலவும் அக்காலத்தில் அமைந்தே நாடகமும் ஏனையவும் நடந்தன. வட்டக்களரி அரங்கமும் அவற்றுள் ஒன்று வடமோடி கூத்துக்கள் பலவும் அவ்வாறே ஆடப்பட்டன. படச்சட்ட அரங்கு தென்மோடிக்கும் நாடகங்களுக்குமாக வந்தனர். அரங்குகளிலெல்லாம் கலைவல்லார் ஆடி வந்தனர்.

**"அரங்கின்ற வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்"**

வட்டாடி அரங்கில் வட்டாடிக்கான தாயக்கற்கள் நகர்த்தப்பட்டன.

வட்டக்களரி அரங்கில் வீமனாக ஆடியவர் இன்று போற்றப்படுகின்றார். முன்பு கூத்தியலை நூலை வெளியிட்ட கலாசாரப் பேரவையினர் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். இன்றும் அரங்குக்கு பெயர் சூட்டி மகிழ்கின்றனர். நாகப்பு அண்ணாவியாரின் கூத்துப்பற்றி யான் அதிகம் பேச வேண்டியதில்லை.

நினைத்தல், நிறுவுதல் என்ன இரு சொற்களில் கலைஞர் திறம் பேசலாம். கலைகளை நினைத்து நிறுவிய கூத்தண்ணாவி ஒரு எழுத்தாளரும் ஆவார். 'இசையும் பாடப்படும்' என்ற கலையை பாடசாலை நாள்களிலும், 'ஏழையின் காதல்' என்ற நாவலையும், 'காதலும் விளக்கமும்' என்ற கட்டுரை நூலையும் தந்தவர். எனினும் கூத்தும் கலையினையே வளர்த்தனர், வளர்க்கத்தூண்டியவர். தம் பிள்ளைகளையும் ஏனைய கலைஞர்களையும் கூத்தில் வல்லவராக்கியிருக்கின்றார்கள். அவர்கள் இன்றும் ஆடி வருகின்றார்கள்.

### கலைஞர் நாகப்புவின் மறுபக்கம்

இவரின் மறுபக்கம் பேசப்படுவதில்லை. துணிச்சல் மிக்கது அந்தப்பக்கம். சொல்லுகின்ற அளவில் பயன்படாதவரை மல்லாடியே வெல்லவேண்டும், கோயிலில் வேள்வி உயிர்ப்பலி நிறுத்தப்படவேண்டும், பாடசாலைகளில் அனைத்துச் சமூகத்தினரும் கற்கவும் கற்பிக்கவும் வேண்டும் என்ற கருத்துகளால் ஈர்க்கப்பட்டு வன்முறை மூலமாக வேள்வியை நிற்பாட்டியவர். பாடசாலையில் எல்லோருக்கும் இடந்தேடிக் கொடுத்தவர்.

**"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்"**

எனக் கீழ்மைத்தனமுடையோரை வென்றார். வெடி வைப்பு, தீவைப்பு போன்ற செயல்களும் சமூக விரோதமானது என்று கருதும் அந்தக்காலத்தில் இவை நன்நோக்கில் பயன்தந்தன.

தனித்து நினைத்தல், கலந்து நினைத்தல், தனித்து இயங்குதல், கலந்து இயங்குதல் என்பதாகக் கலைகளும் பிறவும் தனித்தும் கலந்தும் ஆக்கம் பெற வேண்டியவையே. அதேபோல தனித்தும் கலந்தும் உழைத்தவரே நாகப்பு.

# யாழிசையின் இலக்கிய விருந்து


- நல்லை மகள் -

பொதிகைத் தமிழின் பொற்பு நிறைவாய், யாழிசைக் கவித் தடாகத்தின் இலக்கியச் சந்திப்பும் நூல் வெளியீடும், சுன்னாகம் பொது நூலகத்தில், நிறுவுநர் கவிஞர் உடுவிலூர் கலா தலைமையில் அண்மையில் மிகச் சிறப்பாக அரங்கேறியது.

பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்கி ஆறு மணிவரை தொய்வின்றி, சலிப்பின்றி மிக நேர்த்தியாக நடந்த நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், வலி. தெற்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் இ.மயூரநாதன், கனடா வள்ளுவன் இணையப்பள்ளி நிறுவுநர்கள், ஆசிரியர்கள் சோ.ஜெயகுமார், திருமதி ஜெ.ஜோதி, எழுத்தாளர் அருன் செல்லப்பா, திருமதி அங்கையற்கண்ணி செல்வகுமார் போன்றோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சமூக சிந்தனை மேலோங்க, 'புரையோடி நிற்கும் சமூகச் சீரழிவுகளுக்குக் காரணம் குடும்பங்களா? அறிவியலா?' என்ற தலைப்பில் உடுவிலூர் கலா தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெற்றது.

'அடுத்த சந்ததிக்குக் கையளிப்போம்' என்ற தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்சுமி உதயகுமார் தலைமையில் கவியரங்கும் இடம்பெற்றது.

ஆசிரியர் தயாளனி சிவநாதனின் 'கருக்கூடும் மேகங்கள்' கவிதை நூலினை, கவிஞர் உடுவிலூர் கலா வெளியிட்டு வைக்க, பொதிகை, ஏணிப்படிகள் தொகுப்பாளினி ந.தாமரைச்செல்வி பெற்றுக்கொண்டார்.

நூல் நயப்புரையினை கவிஞர் வைர.வசீகரன் நயந்துரைத்தார்.

நிகழ்வினை செந்தமிழ்ச் சொல்லெடுத்து, எழில் நடை கொண்டு தொகுத்தளித்தார் கவிஞர் யோ.புரட்சி. இலக்கியச் சந்திப்புக்கு இலக்கணமான வகையில் நிகழ்வுகள் நடந்து முடிந்தன.

# 'நீதம்' நூல் வெளியீடு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் முன்னெடுக்கும் "நீதம்" மலர் வெளியீடு கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக உச்ச நீதிமன்ற நீதியரசர் அர்ஜீன ஒபயசேகர, கௌரவ விருந்தினராக திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற மற்றும் மாகாண மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான நீதிபதி டி. எஸ்.சூசைதாஸ், யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா, பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் யூட் கிரிசாந்தன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன், மருத்துவ பீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமார், சட்டதுறை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு இந்த நிகழ்வை சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் தோற்றம் தொடர்பில் உதயன் புதன்பொய்கையில் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியே இது. இந்தப் பகுதியில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய அதிபர்கள் தொடர்பில் பதிவாகின்றது.)

# அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் தோற்றப் பின்னணி

பழைய மாணவன், அளவையூர், சைவப்புலவர்
**பண்டிதர் வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்**
B.A (peradeniya), B.A(Hons) Jaffna
M.A (peradeniya), Dip.in Human Resource(India)
ஓய்வுநிலை கமத்தொழில் சேவை பெரும்பாக உத்தியோகத்தர்.

### அதிபர் சு.சிவசுப்பிரமணியம்

இவர் கல்லூரியின் ஸ்தாபகரும் அருணாசல உடையாரின் பேரனும் கல்லூரி முகாமையாளர் சுப்பையாவின் மைந்தனுமாவார். 1949ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாக பட்டம் பெற்று வெளியேறிய காலத்தில் அரச துறைகளில் பல்வேறு உயர்தொழில் வாய்ப்பை பெறக்கூடிய நிலையிலிருந்தும் தமது பேரனால் கட்டப்பட்ட கல்லூரியை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டும் எனும் உன்னத நோக்குடன் 1949இல் ஆசிரியராகப் பணியேற்று 1952ஆம் ஆண்டு கல்லூரி இரண்டாம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டபோது அதிபராக இருந்த சிதம்பரப்பிள்ளை தானாக முன்வந்து அதிபர் பதவியை இவரிடம் கையளித்தார்.


1949ஆம் ஆண்டுமுதல் 1968ஆம் ஆண்டு வரையுள்ள இவரின் காலப் பகுதி கல்லூரியின் உன்னதமான வளர்ச்சிக் காலம் எனலாம். தமது முன்னோர்களின் இலட்சியக்கனவை நிறைவேற்றுவதில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். அதனடிப்படையில் விஞ்ஞானக் கூடங்கள் கட்டப்பட்டு அதற்கேற்ற வசதிகளை ஏற்படுத்தி இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. நூல் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டு பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு நூலகம் சிறந்த முறையில் இயங்க வழியமைத்தார். பாலர் வகுப்பிலிருந்தே இக்கல்லூரியில் மாணவர்கள் கற்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு கட்டடங்களை அமைத்ததுடன் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்புச் செய்து மாணவர்கள் சகலவிதமான விளையாட்டுப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வசதி செய்தார். அத்துடன் சங்கீதம், சமயம், விவசாயம் ஆகிய துறைகளில் மாணவர்கள் வடமாகாணத்தில் பரிசில்களைப் பெற்று சாதனை புரிவதற்கும் முன்னணியில் திகழ்வதற்கும் அரும்பாடுபட்டார்.

மிகவும் வறிய மாணவர்களுக்கு வசதிக்கட்டணத்தை குறைத்து, அன்றேல் இல்லாமலும் செய்து அவர்கள் கல்வி பெற்றுக்கொள்வதற்குத் தானாக முன்வந்து செயற்பட்டார். 1968 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்தக்கல்லூரிக்கு நான் அனுமதி பெறச் சென்றவேளை என்னை இன்முகம் காட்டி வரவேற்றார்.

அதிபர் சிவசுப்பிரமணியம்; 1968ஆம் ஆண்டு முதலாம் தர அதிபராகப் பதவியுயர்வு பெற்று சுழிபுரம் விக்ரோறியா கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றார். பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றி பதவியுயர்வு பெற்று, பிரதம கல்வி அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்றார். பின்பு முல்லைத்தீவுக்கு மாற்றலாகி கடமையாற்றியவேளை உடல்நலக்குறைவு காரணமாக 1984ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இவருடைய இளமை வயதில் மரணத்தை தழுவியமை கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பாகும். அருணோதயக் கல்லூரி வரலாற்றில் இவர் நாமம் நின்று நிலைபெறும்.



அதிபர் சு.சிவசுப்பிரமணியம்



அதிபர் ச.சிதம்பரப்பிள்ளை

### அதிபர் ச.சிதம்பரப்பிள்ளை

பொன்னையா மாஸ்ரர் என கிராமத்தவர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட சிதம்பரப்பிள்ளை ஆரம்பக் கல்வியை அளவெட்டி ஆங்கிலப்பாடசாலையில் கற்று, பின் உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று, ஆசிரியப் பணியை அருணோதயாவில் ஆரம்பித்தார். அத்துடன் எளிமையான வாழ்வை விரும்புபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் உதவி அதிபராக இருந்த காலத்தில், காலத்துக்குக் காலம் அதிபர்களாக இருந்து பணிபுரிந்தவர்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து பாடசாலையைச் சிறந்த ஒரு நிலைக்குக் கொண்டு வந்ததில் இவரது பங்கு அளவிடற்கரியது. இவர் அதிபராக வந்ததும் சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்பை ஆரம்பித்தார். அந்த வகுப்பில் கற்பிப்பதற்கு போதிய திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இல்லாதபோதிலும் எப்பாடமாயினும் கற்பிக்கும் தகைமையை இவர் கொண்டிருந்ததால் அவ்வகுப்பு தளராது நடைபெறக்கூடியதாக இருந்தது. இவர் பாடசாலைக்கு வேண்டிய கட்டடங்களை அரசின் உதவியோடு அமைத்தது மட்டுமல்லாமல் கல்லூரியாக மாற்றம் பெற உழைத்தவரும் இவரே. இவர் ஒரு சமூகத் தொண்டராக இருந்து கிராமத்தவர்களுக்கு சேவை புரிந்த காரணத்தால் இவருக்கு கிராம மக்களின் ஆதரவும் அன்பும் அதிகம் இருந்தது. ஒழுக்க விழுமியங்களை மாணவர்களிடையே வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்ததோடு அதில் வெற்றியும் கண்டார். அதிபர் சிதம்பரப்பிள்ளை மேன்மையான குணாதிசயங்கள் கொண்டவர். கல்லூரி முகாமையாளரின் மகன் சிவசுப்பிரமணியம் விஞ்ஞான பட்டதாரியாகி அருணோதயக் கல்லூரிக்கு கற்பிக்க வந்தபோது அவரையே அதிபராக இருக்கச் சம்மதித்து தாம் உப அதிபராகக் கடமையாற்றினார். இந்த விட்டுக்கொடுப்பினால் அவர் தனது தகுதியை உயர்த்திக் கொண்டுள்ளார் என்றே கூறலாம். இக் கல்லூரியின் அதிபர்களாகக் கடமையாற்றிய பலருக்கும் கல்லூரியின் வளர்ச்சியில் பங்குண்டெனினும் அதிபர் சிதம்பரப்பிள்ளைக்குப் பெரும் பங்குண்டு என்பதை எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள். தொடர்ச்சியாக 41 ஆண்டுகள் அருணோதயக் கல்லூரியில் கடமையாற்றி 1969ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றார் சிதம்பரப்பிள்ளை என்னும் பெருந்தகை.

இவர் எனது கணித ஆசிரியராக இருந்த காரணத்தால் அப்பாடத்தில் எனது பின் தங்கிய நிலைமையை அறிந்த ஓய்வுக்குப் பின்னர் என்னை வீட்டுக்கு அழைத்து, இலகுவான முறையில் கற்பித்து முதல்முறையிலேயே க.பொ.த. சா/தரப் பரீட்சையில் சித்தியடையச் செய்தார். என்னைப் போன்றே இன்னும் பல தரத்திலுள்ள மாணவர்களுக்கும் இலவசமாக பாடம் புகட்டினார். இத்தகைய பெருந்தகை 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனது 84 ஆவது வயதில் இயற்கையை எய்தினார்.

(அடுத்த வாரம் தொடரும்)

---

# நவாலியின் வரலாறும் அதன் எழுச்சியும்

கி.பவுலின்



வயல்களும், குளங்களும், கேணிகளும், பொதுக்கிணறுகளும், கடல்வளங்களும் கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் கிராமமே நவாலி. ஒன்பது ஆலயங்கள் சூழ்ந்திருக்கும் காரணத்தினால் 'நவ' ஆலயங்கள் கொண்ட ஊர் நவாலி என முன்னோர்களால் பெயர் சூட்டப்பட்டது.

நஞ்சையும் நெய்தலும் நவாலியை சூழ்ந்திருந்ததால் முற்கால ஊர் வாசிகளால் விவசாயமும் கடற்றொழிலும் பிரதான தொழிலாகக் கொள்ளப்பட்டது. நவாலியில் மூன்று சமயத்தவர்கள் முரண்பாடுகளின்றி வாழ்ந்துவருவதும் முற்காலம் தொட்டு மண்ணின் மைந்தர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதும் இவ்வூரின் பெருமை சேர் அம்சங்களாகும். கல்வியில் இவ்வூர் சிறந்து விளங்கியமைக்கு ஆரம்பத்தில் இருந்து தோற்றம் பெற்ற கிறிஸ்தவ கல்லூரிகளை அடிப்படைக் காரணமாகக் குறிப்பிடலாம்.

நவாலியின் பாரம்பரியத்தையும் அதன் சீரும் சிறப்பும் குன்றாத வகையில் பாதுகாத்தலிலும் வளர்த்தெடுத்தலிலும் அறிஞர்கள், பெரியோர்கள், கலைஞர்கள், முதலானோரின் பங்களிப்புகள் காலந்தோறும் இருந்து வந்துள்ளன. அந்த வகையில் 'தங்கத் தாத்தா' எனும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பங்களிப்பு எண்ணிலடங்காததாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் பாரம்பரியம் அந்நிய நாட்டினரால் ஆட்டங்காண முற்பட்ட சமயத்தில் காலூன்றி நின்று 'தமிழ்' காத்தவர்களில் நவாலியூர் தங்கத் தாத்தாவும் ஒருவர். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது போல இவர் பெற்றெடுத்த பிள்ளைகளில் பண்டிதர், இளமுருகனார், வடமொழி இலக்கிய வரலாறு எனும் நூல் படைத்த நடராசன் ஆகியோர் தமிழ் அறிஞராக விளங்கினர்.

நவாலியின் கலைவழித் தொடர்ச்சியாக கலையரசு சொர்ணலிங்கம் கண்டதும் இவ்வூரின் கணக்கற்ற பாக்கியமாம். நாடகமேதை ஷேக்ஸ்பியரை தமிழ் உலகில் உருவம் கொடுத்தவர். வேடம் பூணுவதில் மேதையாக விளங்கியவர். இதனால் நாடகத்துறையை நானிலம் போற்ற உயர்த்தி நாடக சங்கத்தையும் உருவாக்கி நவாலியின் பெருமையை பாரறியச் செய்தார். இன்றுவரை யாழ்ப்பாணத்தில் மேடையேறும் பல நாடகங்கள், சரித்திர நாடகங்களில் கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடக பாணியின் தாக்கம் செல்வாக்கு செலுத்துகின்றது.

நவாலியின் பெருமையை பறைசாற்றும் வரிசையிலேயே கலையரசு சொர்ணலிங்கத்தைப் போலவே கலாபூஷணம் நவாலியூர் நடேசனும் இடம்பிடித்திருக்கின்றார். கவிதையால் கலைக்கு பலம் சேர்த்தவர். இக்கலைஞர்கள் வரிசையில் நவாலியின் பெண்ணியத்துக்குப் பெருமை சேர்த்த பெண் கவிஞர் 'நவாலியூர் நாயகி' பாடல்கள் இயற்றுவதில் பாண்டித்தியம் பெற்றவர்.


மகிழ்வும், மங்கலச் சத்தமும், சலங்கையும், சங்கீதமும் ஒலித்த இம்மண்ணில் கறை படிந்த நாளும் வரலாற்றில் வந்துபோனது. அதுதான் 1995ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதியன்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதல். இந்தத் தாக்குதலையடுத்து நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் இரத்த வெள்ளமாகக் காட்சியளித்தது. இருப்பினும் இடம்பெயர்வின் பின்னரும் இம்மண்ணின் மக்கள் முன்னேற்றப் பாதையிலிருந்து பின்னோக்கி நகர்ந்து விடவில்லை.

அருட்பணியாளர்கள் பலரின் உதவியுடன் தேவாலயம் மீளக் கட்டியெழுப்பப்பட்டதுடன் இந்த ஆலயங்களும் கோவில்களும் தாராள மனதுடையோரால் புத்துயிரளிக்கப்பட்டன. அருட்தந்தை பி.எம்.இம்மானுவேலால் வளர்த்தெடுக்கப்பட்ட நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயமும் அதன் வளாக மரங்களும் இன்று விருட்சங்களாகி சான்று பகர்ந்து நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளர் என்ற பேச்சுக்கு இடமில்லை!

## பெரமுனவின் எம்.பி. ரோஹித தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 30

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துடன் வாடகைக்கு வேட்பாளரை பெறவேண்டிய தேவையும் எமக்குக் கிடையாது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காகவே நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவுசெய்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளதால் எமது கட்சியின் கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது.

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து இதுவரை எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் முக்கியமான அரசியல் தீர்மானங்களை அறிவிப்போம். கட்சியைப் பலப்படுத்தும் வகையில் பல தீர்மானங்களை தற்போது முன்னெடுத்துள்ளோம். மக்கள் மத்தியில் ராஜபக்சக்களுக்கு உள்ள செல்வாக்கை ஒருபோதும் இல்லாதொழிக்க முடியாது - என்றார். (அ-ம)





# தூய்மைப்பணியும் மரம் நடுகையும்!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பிரதேச செயலகமும், யாழ்ப்பாணம் கரிதாஸ் - கியூடெக் நிறுவனமும் இணைந்து முன்னெடுத்த கடற்கரை சுத்தப்படுத்தலும், மரம் நடுகையும் சாவகச்சேரி கோவிலாக் கண்டி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கரிதாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ், சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சர்வேஸ்வரன், சாவகச்சேரி பங்குத் தந்தை ஞானரூபன், கோவிலாக் கண்டி மீனவர் சங்கம் மற்றும் கோவிலாக் காண்டி மாதர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-27)


## வேலைவாய்ப்பு

கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு தச்சு வேலை தெரிந்தவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை. கிழமை / மாத அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

இல.09, நந்தாவில் வீதி, தாவடி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0777 120 945

(CS 26112) A-1

## பெயர் மாற்றம்

பட்டியோலை, உடுவில் தெற்கு, சுன்னாகத்தில் வதியும் **சகாயம் சிவபோஜினி** ஆகிய நான் எனது பெயரை **சகாயம் சுபோஜினி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சகாயம் சுபோஜினி என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிஷ குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**சகாயம் சுபோஜினி**

## தேவை

யாழ். நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 155 9905

## பெயர் மாற்றம்

10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவில் வதியும் **சூசைப்பிள்ளை கிறிஸ்தோ** ஆகிய நான் எனது பெயரை **சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பு** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பு** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

(CR 40042)A-1 **சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பு**

## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி கந்தசாமி**

**(ஓய்வுபெற்ற கணக்காய்வு பரீட்சகர் மற்றும் ஓய்வுபெற்ற செயலாளர் விவேகானந்த சபை)**

ஏழாலை வடக்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி (ஓய்வுபெற்ற கணக்காய்வு பரீட்சகர் மற்றும் ஓய்வுபெற்ற செயலாளர் விவேகானந்த சபை) அவர்கள் நேற்று (29.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி (உப அதிபர், ஏழாலை மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகானந்தம், சரஸ்வதி மற்றும் தங்கமலர், யோகமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமாரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை வடக்கு உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:077 677 4486

தகவல்: குடும்பத்தினர்

(CS 26126) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (10.09.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**திரு. பொன்னம்பலம் யோகலிங்கம்**

அவர்களின் முதலாம் ஆண்டு நிகழ்வு இன்று (30.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

மனைவி மற்றும் பிள்ளைகள்.

(CS 26119)AH-1 076 152 0015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2023.09.15 ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நியந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள். உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறி வித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ. மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் முலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர். மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 12.09.2023 மு.ப. 10.30**

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**30.08.2023**

(CR/40041) (N.1)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய டிப்பர் சாரதி கைது

*யாழ்ப்பாணம், ஓக.30*

சண்டிலிப்பாயில் அனுமதிப் பத்திரம் இன்றி மணலேற்றிச் சென்ற டிப்பர் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த டிப்பர் ரக வாகனமொன்றை வழிமறித்து சோதனையிட்ட போது, அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அதையடுத்து 33 வயதான வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதுடன், வாகனமும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)

## தரம்: 6 - G.C.E (OL) பிரத்தியேக வகுப்புக்கள்

**தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கிலம் மொழிமூலம்**
வீடுகளிற்கோ நிறுவனங்களுக்கோ வந்து கற்பிக்கப்படும்

தொடர்பு: **075 049 7577**
**076 889 1321** (cs51859) (2.6)

## உடனடி வேலைவாய்ப்புகள்

- **Accounts Clerk** 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- **Typesetter** (தமிழ். ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- **Sales & Marketing** முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

(CS/26118)AH-1

**K.V. Printers Books Distributing Centre**
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924

## தேவை

**கொழும்பு, கொட்டாஞ்சேனை**
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு**

- ✓**பிரதான குருக்கள் (ஒருவர்)**
- ✓**உதவிக் குருக்கள் (இருவர்)**
- ✓**மடப்பள்ளியாளர்கள்**

உடனடியாகத் தேவை.
தகுந்த சம்பளம். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**077 779 4777**
**கொழும்பு கொட்டாஞ்சேனை**
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**இல.53,55 கொழும்பு - 13**

# YARL SMART



**நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்படும்**



**NxtGen**
Smart Academy
Success Start Here

**FREE**

**கணினிக் கற்கைநெறி**

**கணினிக் கற்கை நெறியுடனான தொழிற்பயிற்சியும் வேலைவாய்ப்பும்**

முதல் பதிவு செய்யும் 120 மாணவர்களுக்கு மட்டும் விண்ணப்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வயதெல்லை : 18 - 24
விண்ணப்பிக்கும் முடிவுத்திகதி
15-09-2023

தொடர்புகளுக்கு
0760075222 / 0756101100

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பஸ்ஸில் கைபேசி திருட்டு

மானிப்பாயில் இருந்துயாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ்ஸில் பயணி ஒருவரின் தொலைபேசி திருடப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் பயணித்த மானிப்பாயைச் சேர்ந்த பெண்ஒருவர்யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் இறங்கிய போது, அவரது கைபேசி திருடப்பட்டுள்ளதை அறிந்துள்ளார். இது தொடர்பாகமானிப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எ-125)

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 13 • 06 • 1981



கண் நெகிழ 25 • 08 • 1999

### செல்வி திருமகள் கனகசபை

**திதி: சதுர்த்தசி**

நாவாறு வருடங்கள் ஓடோடி போனதம்மா
ஈராறு கரத்தானின் திருவடியை நீ தேடி
தேரேறும் வேற்பெருமான் தரிசனம் காண சென்றாய்
பாரெங்கும் அலைகின்றோம்
- உன் பிரிவின் துயர் தாண்ட.....

தற்காலிக முகவரி:
125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
நிரந்த முகவரி:
மீசாலை வடக்கு, மீசாலை.

உன் பிரிவால் வாடும்
**பெற்றோர், சகோதரர்கள்.**

(cs.51862) (N.1)

## 11 ஆம் ஆண்டு நினைவதனில்

அன்னை மடியில் 06 • 12 • 2000



ஆண்டவன் அடியில் 30 • 08 • 2012

### செல்வி துஷாந்தி சிறிசோமஸ்கந்தன்

(மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் : 7F)



அன்பிற்கு நிகராய் இந்த அகிலத்தில் எமக்கேதுண்டு
கள்ளமில்லா உள்ளமதை காலன்
கொள்ளை கொண்டதேனோ ?

எம் கண்ணின் மணியே துஷாந்தியே!
என்றென்றும் எம் இதயக் கோவிலில் வீற்றிருப்பவளே
மனம் கனிந்த புன் சிரிப்பு மனதை விட்டகலுமோ அம்மா!
விடிவின்றி விழி நீரும் வான் மடைபோல சொரியுதம்மா

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**செ. சிறிசோமாஸ்கந்தன்**
**(சிறி சோமாஸ் அரைக்கும் ஆலை)**
**300, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி.**

உம் பிரிவால் துயருறும்
**அன்பான**
**அப்பா, அம்மா,**
**தம்பி, தங்கைமார்.**

(CS 26120) (N.1)

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவு

### அமரர் சுகந்தன் ஜான்சி

தோற்றம் 22.06.1977
மறைவு 31.07.2023



"உன் பெயரைச் சொல்லி அழைத்தேன்
நீ எனக்கு உரியவன்" - எசா 43:1


பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் படைப்பாளியாய்
அன்பு நிறை ஆசானாய்
உயிர் சுமக்கும் நல்லுறவாய்
கள்ளமில்லா சிரிப்பாலே – எம்
கவலை மறக்க வைத்தீரே
இன்று உம் பிரிவால்
கலங்கி நிற்கிறோம் – எம்குரல்
கேட்கிறதா?

**உம் ஆன்ம சாந்திக்காக நிதமும் இறைவனை வேண்டுகின்றோம்.**

**இளவாலை மேற்கு, இளவாலை.** (CS/51866) AH-1 **குடும்பத்தினர்.**

## 11 ஆம் ஆண்டு நினைவு தினம்

### அமரர் இளையதம்பி அருமைநாதன் (அருமை)



அன்னை மடியில் 06.10.1954
ஆண்டவன் அடியில் 29.08.2012

**திதி - வளர்பிறை சதுர்த்தசி (30.08.2023)**

அப்பா!
நீங்கள் கண்முன்னே வாழ்ந்த
காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும் அப்பா!


**உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 07 • 02 • 1965



விண்ணில் 28 • 08 • 2023

### செல்லையா சுரேஸ்குமார்

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுரேஸ்குமார் கடந்த (28.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும், உதயமலரின் பேரன்புமிகு கணவரும், காலஞ்சென்ற துரைராசா தவமணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், யானுசன் (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி- மாணவன்), யானுசா (யாழ். இந்து மகளிர் கல்லூரி - மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதகுமாரி, காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயரஞ்சன், சுசீலாதேவி, காலஞ்சென்ற சுகிர்தமலர், றணிதமலர், வதனமலர், இன்பமலர், இராஜகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2023) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 420 1370**
**077 108 4879**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 26121) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் பயறுச் செய்கை இம்முறை அமோக விளைச்சல்

## கமநல சேவைப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 30

மன்னாரில் மாற்றுப்பயிராக செய்கை பண்ணப்பட்ட பயறுப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் இந்தமுறை வெற்றிகரமாக அமோக விளைச்சலைப் பெற்றுள்ளனர் என்று மன்னார் மாவட்ட கமநலசேவைப் பணிப்பாளர் திருமதி சாகிரா பானு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; மன்னாரில் கட்டுக்கரைகுளத்தின் கீழுள்ள நெல் வயலில் சுமார் ஆயிரத்து 600 ஹெக்ரேயர் பரப்பில் மாற்றுப்பயிரான பயறு செய்கை பண்ணப்பட்டது.

இதில் சுமார் 900 மெற்றிக்தொன் பயறு அறுவடை செய்து அமோக விளைச்சலை விவசாயிகள் பெற்றுள்ளனர். எனினும் பயறுக்கான விலையை உரியகாலத்தில் பெறுவதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை பயறுப் பயிர்ச்செய்கையில் மன்னாரில் பல பெண்களுக்கு தொழில்வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பயறு அறுவடையில் பெண்கள் நாளாந்தம் 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 6 ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டக்கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. பயறு செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் மீண்டும் அடுத்த பயறுச் செய்கை போகத்துக்கு வேறு மாவட்டங்களிடம் விதைக்கான பயறை எதிர்பார்க்காது உரியமுறையில் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும். அதற்கான ஆலோசனைகளை விவசாய போதனா ஆசிரியர்களை சந்தித்துப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ச-60)

## கல்வி சுற்றுலாவுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம், ஓக.30

வடமராட்சி - தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம், சைவசித்தாந்தத் துறை மாணவர்களின் கல்விச்சுற்றுலா, திருத்தல யாத்திரைக்காக ரூபா ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நன்கொடையை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து பிரதிநிதிகளிடம் வழங்கியுள்ளார். (எ-ரி3-27)


## பட்டா ரக வாகனம் தீயில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஓக.30

பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப் பகுதியில் பட்டா ரக வாகனம் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வாகனமே தீப்பற்றியுள்ளது. அதிக வெப்பம் காரணமாக ஏற்பட்ட மின் கசிவால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-23)



## மேய்ச்சல் தரைக்கு தீ வைத்த விஷமிகள்

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி - கனகாம்பிகைகுளமருகே இருபக்கமும் காணப்படும் ஆற்றுப்படுகையிலுள்ள மேய்ச்சல் தரைக்கு இனந்தெரியாத விஷமிகளால் நேற்றுமுன்தினம் தீவைக்கப்பட்டுள்ளது.

இந்த விஷமச் செயலால் கனகாம்பிகைகுளத்தின் முன்பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பின்பகுதிவரை செழித்து வளர்ந்திருந்த பச்சைப்புற்கள் தீக்கிரையாகியுள்ளன. இதில் சுமார் ஆறு ஏக்கர் வரையான பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

தற்போது நிலவுகின்ற மிகவும் கடுமையான வறட்சிநிலையால் கால்நடைகள் உணவின்றித் தவித்து வருகின்றன. சில மனசாட்சியின்றியவர்களால் மேய்ச்சல் தரைக்கு தீ வைத்து நாசம் செய்யப்பட்டுள்ளது என்று கால்நடைவளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-113)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 30

'வரலாற்று ஆய்வுகளும் மானுட மேம்பாடும்' என்ற எண்ணக்கருவில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டக் கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப்பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-ரி3)

## இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் திட்டம் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ். மாவட்டத்தில் அண்மையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் செயற்றிட்டம் வெற்றியளித்துள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்தார்.

பிரதேசரீதியாக சேகரிப்புகள்யாவும் நிறைவடைந்த நிலையில், இலத்திரனியல் கழிவுகளை ஒப்படைக்க விரும்புவோர் அவற்றை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை யாழ். மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்டம் முழுவதும் சேகரிக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுகளில் ஒருதொகுதி பதிவு செய்யப்பட்ட இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய இலத்திரனியல் கழிவுகளும் அனுப்பப்படவுள்ளன. (எ-ரி2-125)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின் சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதிவலம் வருவார் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-17)

# கிரவலுக்குள் மறைத்து மரக்குற்றிகள் கடத்தல்

## வாகனச்சாரதி கைது

யாழ்ப்பாணம், ஓக.30

கிளிநொச்சி - கனகாம்பிகைக்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி டிப்பரில் கருங்கல் கிரவலுக்குள் மறைத்து சூட்சுமமாக எடுத்துவரப்பட்ட தேக்கமரக்குற்றிகள் சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்த மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

7 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்க மரக்குற்றிகளே பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அவற்றை மறைத்து கடத்திவந்த குற்றச்சாட்டில் டிப்பர் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வில் தயாசிறி செய்தி பொய்யானது

## மைத்திரி விளக்கம்

**கொழும்பு, ஓக. 30**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைகின்றார் என்று வெளியான செய்தியில் உண்மையில்லை என்று சுதந்திரக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

சுதந்திரக்கட்சியின் ஆண்டுவிழா எதிர்வரும் 2ஆம் திகதி குருநாகலில், தயாசிறி ஜயசேகரவின் தொகுதியில் நடைபெறவிருந்தது. எனினும், ஆளுங்கட்சியின் பக்கம் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையின் பிரகாரம் மாநாடு கொழும்புக்கு மாற்றப்பட்டது. இதனால் கொழும்பு மாநாட்டில் தயாசிறி பங்கேற்கமாட்டார் எனவும், பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அவர்நீக்கப்படவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின.

இதுதொடர்பில் வினவிய போதே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார். அதேவேளை கட்சி மாநாட்டில் தயாசிறி ஜயசேகர பங்கேற்பார் எனவும், செலவுக் குறைப்பை கருத்திற்கொண்டே மாநாடு கொழும்பில் நடத்த முடிவெடுக்கப்பட்டது எனவும் மைத்திரி குறிப்பிட்டார். (ம-44)


கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு
**வேலையாட்கள் தேவை**

- ✓ பெண் சமையலாளர்
- ✓ அரிசிப் பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள்
- ✓ **Clerk** வேலை (ஆண்)
- ✓ கூலி வேலையாட்கள் (ஆண், பெண்)
- ✓ சாரதி **(Heavy And Light)**

தொடர்பு கொள்ள வேண்டிய இல :
**076 119 0267**
நேரம் :- காலை **9.00 am - 5.00pm**
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/51808) AH-1

**வேலையாள்கள் தேவை**

**பிரபல பாதணி விநியோக நிறுவனத்திற்கு** வேலையாள்கள் தேவை.

- * Supervisor (Female)
- * Sales Rep (Male)

நிர்வாகத்திற்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 067 4452**
(cs 51864) (N-1)

**தோட்டக் காணி விற்பனைக்கு**
புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில்
46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
**077 706 6487**

**காணி விற்பனைக்கு**
சுதுமலை இறையில் அமைந்துள்ள நிலப்பரப்பு 04 குளி 08 விஸ்தீரணம் கொண்ட நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
**077 869 4931**

**A/L Online Classes**
Biology, Chemistry
**077 807 5566**

**தேவை**
மருதனார்மட சந்தியில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு
1. களஞ்சியக் காப்பாளர், 2. பணம் வசூலிப்பாளர்
3. வாகன சாரதி (AD)
போன்ற பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.
**076 4550 621**

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்ப்பாணத்தில் அல்லது யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
**076 790 9387**
(CS/51863)AH-1

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு. கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை
**தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.**


## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 12 . 1943

மறைவு 29 . 08 . 2023

### திருமதி சிவசோதியம்மா முருகேசு

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசோதியம்மா முருகேசு நேற்று (29.08.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர்), இலக்குமிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆ.முருகேசு (தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவி யும், ரவீந்திரன் (கட்டுப்பாட்டாளர், யாழ் FM, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), நந்தகுமார் (பிரதிப் பதிவாளர், வவுனியாப் பல்கலைக்கழகம்), சிறீதரன் (சிரேஷ்ட முகாமையாளர், ஒகிள்வி சிறிலங்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருணாதேவி, காலஞ்சென்ற டாக்டர் கௌரி மனோகரி, சிவகௌரி (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீராகவன், இந்திராணி, சிவானந்தன், பரஞ்சோதியம்மா மற்றும் ஞானசோதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் செந்தூரன் (சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை, கைதடி), மாதங்கி (ICBT Campus, Colombo), மாதுமை (மாணவி, மருத்துவபீடம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), சேயோன் (மாணவன், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), கஜானன் (மாணவன், சென் தோமஸ் கல்லூரி கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (30.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (31.08.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 534 2129**

(cs 51830) (N-1)

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 04 . 1937

இறப்பு 29 . 08 . 2023

### அருணாசலம் பொன்னுத்துரை (இந்திரன்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பொன்னுத்துரை (இந்திரன்) அவர்கள் நேற்று (29.08.2023) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், தவமணி அவர்களின் பாசமிகு கணவரும், தயாபரன் (உபதபாலகம் - ஆனைக்கோட்டை), லதா (ஜேர்மனி), தயாளன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா, டிலானி, சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானுஜன், வானுயா, சாருயன், பகீரதி, தேனுஜன், கனிஷியா, கிருஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான இந்திராணி, சின்னராசா, செல்வராணி மற்றும் தேவராணி, தேவராசா, அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

(CS 28125) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org